# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண்.061/பேரூ/முமந/2021

நாள் 23.08.2021

திரு. மா. பூங்காவனம்,
பனப்பாக்கம், ராணிப்பேட்டை மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பனப்பாக்கம் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி, எண்.12/5 அம்மநாயனார் கோயில் வீதி என்ற முகவரியில் வசிக்கும் திரு. மா. பூங்காவனம் அவர்களின் 26.05.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 1.6.2020ல் பெறப்பட்டு 61 /2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி, எண்.12/5 அம்மநாயனார் கோயில் வீதி என்ற முகவரியில் வசிக்கும் திரு. மா. பூங்காவனம் என்பவர் பனப்பாக்கம் பேரூராட்சியில் பல ஊழல் முறைகேடுகள் நடைபெறுவதாகவும், திரு. D. பாண்டியன், த/பெ S.A. தண்டபாணி, 54 குயவீதி, பனப்பாக்கம் என்ற முகவரியில் சொத்து பிரச்சனை சம்மந்தமாக 2014 முதல் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுவருகின்றது என்றும், ஆனாலும் பனப்பாக்கம் பேரூராட்சியில் குடிநீர்தொட்டி காவலராக பணிபுரிந்துவரும் திரு. D. நிர்மல்ராஜ் தனது எதிர்தரப்பினரிடம் ரூ.5000/– பெற்றுக்கொண்டு வீட்டுவரி மற்றும் குழாய் வரி ஆகியவற்றை செயல் அலுவலர் உதவியுடன் திருமதி த. கஸ்தூரி என்பவரின் பெயருக்கு மாற்றியுள்ளதாகவும், எனவே

இம்முறைகேட்டில் ஈடுபட்டுள்ள செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி மற்றும் குடிநீர் தொட்டி காவலர் திரு. D. நிர்மல்ராஜ் ஆகியோர் மீது உரிய விசாரணை மேற்கொண்டு, தகுந்த நடவடிக்கை எடுக்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 04.08.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். முறையீட்டு மனுதாரர் மற்றும் பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்னர்:-

மனுதாரர் திரு. மா. பூங்காவனம் 4.8.2021 அன்று இம்முறைமன்ற விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "பனப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள குயவீதி, கதவு எண்.54 என்கின்ற வீட்டிற்கு திரு. தண்டபாணி என்பவரின் பெயரில் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், மேற்கண்ட சொத்துவரி தற்போது திருமதி. த. கஸ்தூரி என்பவரின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சொத்து திரு. தண்டபாணி என்பவரின் பெயரில் உள்ளது. அதை திருமதி. த. கஸ்தூரி என்பவரின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்த பேரூராட்சி அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்திட இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி 4.8.2021 அன்று இம்முறைமன்ற விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "மனுதாரர் தெரிவித்துள்ள குயவீதி கதவு எண்.54 என்கின்ற முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட சொத்து திரு. எஸ்.எ. தண்டபாணி என்பவரின் பெயரிலிருந்து அவரது மனைவியான திருமதி. த. கஸ்தூரி என்பவருக்கு காவேரிப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.2793/2019 நாள் 01.7.2019ல் பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்நேர்வில், எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதை இம்முறைமன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக பதிவு செய்கிறேன். மேலும், எனது 2.8.2021 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களை எனது விரிவான வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை வேண்டிக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி அவர்கள் அளித்துள்ள 2.8.2021 நாளிட்ட அறிக்கையில் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள திரு. த. பாண்டியன், த/பெ S.A. தண்டபாணி என்பவர் மேற்கண்ட சொத்தின் உரிமையாளரின் மகன் ஆவார். திரு. பாண்டியன் என்பவர் சார்பாக திரு மா. பூங்காவனம் என்பவர் முறைமன்றத்தில் புகார்மனு அளித்துள்ளார். திரு. மா. பூங்காவனம் என்பவர் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குயவீதி, கதவு எண்.54, சொத்துவரி வரி விதிப்பு எண்.1206, திரு. S.A. தண்டபாணி

என்பவர் பெயரில் நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேற்படி சொத்தின் உரிமையாளர் திரு. S.A. தண்டபாணி என்பவர் தனது மனைவியான திருமதி. த. கஸ்தூரி என்பவருக்கு மேற்கண்ட சொத்தினை காவேரிப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.2793/2019 நாள் 1.07.2019–ஆம் தேதியில் பத்திரப்பதிவு (செட்டில்மெண்ட் பத்திரம்) செய்துகொடுத்துள்ளார். பின்னர், பத்திரப்பதிவு நகல் மற்றும் பதிவுத்துறை வில்லங்கச் சான்று நகல் ஆகியவற்றை இணைத்து திருமதி. த. கஸ்தூரி சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு ஆகியவற்றை தனது பெயருக்கு மாற்றம் செய்திடக்கோரி 18.9.2019ல் விண்ணப்பம் அளித்ததன் அடிப்படையில், சொத்துவரி வரி விதிப்பு எண்.1206 மற்றும் குடிநீர் இணைப்பு வரி விதிப்பு எண்.434 ஆகியவை பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் மு.மு.எண்.324/2019 நாள் 27.9.2019 நாளிட்ட செயல்முறைகளில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பெயர் மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டதாக செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார்:-

1. இச்சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்படுவதால் ஏதேனும் வில்லங்க விவகாரம் ஏற்பட்டால் அதற்கு விண்ணப்பதாரரே முழுப்பொறுப்பாகும்
2. இவ்வாணை நீதிமன்றத்தின் ஆணைக்கு கட்டுப்பட்டதாகும்
3. நீதிமன்றம் தவறு எனக்கருதினால் இவ்வாணை எவ்வித முன் அறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்
4. பெயர் மாற்றம் செய்யக் கோரி வரப்பெற்ற விண்ணப்பத்தில் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உள்ள கட்டிடமாகவோ அல்லது ஆக்கிரமிப்பு இடத்தில் கட்டப்பட்ட கட்டிடமாகவோ அல்லது நீதிமன்ற வழக்கில் தொடர்பு இருந்தாலோ இந்த ஆணை செல்லத்தக்கதல்ல.
5. இந்த பெயர் மாற்றம் குறித்து விண்ணப்பதாரர் கொடுத்த ஆவணங்கள் ஏதேனும் தவறு என தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இந்த உத்தரவு ரத்து செய்யப்படும்
6. பெயர் மாற்ற ஆணை செய்த பின்பு அடிமனையிடம் உறவுகளுக்குள் ஏற்படும் தாக்கம், ஏனைய வில்லங்கங்கள் ஏதேனும் உண்டாகும் பட்சத்தில் மறு அறிவிப்பு அல்லது தகவல் ஏதுமின்றி இந்த பெயர் மாற்ற ஆணை ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் ஆணையிடப்படுகிறது.

4. முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம், செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி அவர்களது வாக்குமூலம், அவரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலம் மற்றும் விசாரணையின்போது தாக்கல் செய்துள்ள 2.8.2021 நாளிட்ட அறிக்கை மற்றும் திரு. தண்டபாணி என்பவரால் தமது மனைவியான திருமதி. த. கஸ்தூரி அவர்களுக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் ஆகிய அனைத்தையும் பரிசீலிக்கும்போது செயல் அலுவலர்

உரிய விதிமுறைகளின்படியும், உரிய ஆவணங்களின் அடிப்படையிலுமே திருமதி. த. கஸ்தூரி பெயருக்கு சொத்துவரி, குடிநீர் வரி கொடுத்திருப்பது தெரியவருகிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு இந்நேர்வில் முறைகேடு ஏதும் நிகழவில்லை. சட்டமுறைப்படி சொத்தின் உரிமையாளர் திரு. S.A. தண்டபாணி தனது சொத்தினை தன் மனைவி பெயருக்கு அச் சொத்தினை பெயர் மாற்றம் செய்துள்ளதால், வரிவிதிப்பு பெயர் மாற்றம் (மற்றும்) குடிநீர் இணைப்பு, செயல் அலுவலரால் வழங்கியது சரியே என்று இம்முறைமன்ற நடுவம் முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் மனுதாரர் பனப்பாக்கம் பேரூராட்சியில் ஊழல் நடைபெறுவதாக அளித்துள்ள புகார் மனு தொடர்பாக போதிய ஆதாரங்களை அவர் சமர்ப்பிக்கவில்லை. எனவே, செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி அவர்களின் அறிக்கையை ஏற்று இப்புகார் மீதான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

திரு. மா. பூங்காவனம்,
த/பெ P.A. மாணிக்கம், 12/5 அம்மநாயனார் கோவில் வீதி,
பனப்பாக்கம், ராணிப்பேட்டை மாவட்டம்

செயல் அலுவலர், பனப்பாக்கம் பேரூராட்சி, ராணிப்பேட்டை மாவட்டம்

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
உதவி பதிவாளர்
இ.கோ/உதிரி